Reg. No. M. 2997.

தனிப்பிரதி அணு 1.

ஆசிரியர்:
யாழ்ப்பாணம்
தென்கோவை
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

Bureau de la Direction:—
RUE D'AMBALATADOU AYER
MADAM NO. 4, Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம்:
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி
நெ. 4, புதுவை.

VOL. I. { புதுவை, பவ—ஸ்ரீ ஆவணி—மீ —அ உ (23—8—34) } No. 39.

திருமந்திரம்

ஒழிந்தேன் பிறவி யுறவென்னும் பாசங்
கழிந்தேன் கடவுளு நானுமொன் றானே
னிழிந்தாங் கினிவரு மார்க்கமும் வேண்டேன்
செழுஞ்சார் புடைய சிவனைக்கண் டேனே.

ஆலைக் கரும்பு மமுதுமக் காரமுஞ்
சோலைத்தண் ணீரு முடைத்தெங்க ணுட்டிடைப்
பீலிக்கண் ணன்ன வடிவுசெய் வாளோடு
கோலப்பெண் ணுட்குக் குறைவொன்று மில்லையே.

முத்தினின் முத்தை முகிழிள ஞாயிற்றை
யெத்தனை வானோடு மேத்து மிறைவனை
யத்தனைக் காணு தரற்றுகின் றேனையோர்
பித்த னிவனென்று பேசுகின் றாரே.

என்னெஞ்ச மீச னினையடி தாஞ்சேர்ந்து
முன்னஞ்செய் தேத்த முழுதும் பிறப்பறுந்
தன்னெஞ்ச மில்லாத் தலைவன் றலைவிதி
பின்னஞ்செய் தென்னைப் பிணக்கறுத் தானே.

அப்பினிற் கூர்மை யாதித்தன் வெம்மையா
லுப்பெனப் பேர்பெற் றுருச்செய்த தவ்வுரு
வப்பினிற் கூடிய தொன்றுகு மாறுபோற்
செப்பினிச் சீவன் சிவத்து ளடங்குமே.

நீரகத் தின்பம் பிறக்கு நெருப்பிடை
காயத்திற் சோதி பிறக்குமக் காற்றிடை
யோர்வுடை நல்லுயிர்ப் பாத மொலிசத்தி
நீரிடை மண்ணி னிலைபிறப் பாமே.

உ

திருவருள் துணை

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டாஞெடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றுன்வந்து மூந்துமினே.

(திருவாசகம்)

வித்தகம்

புதுவை,

பவ-ஹே ஆவணி-மீ 8உ

கற்பனை

கற்பனை என்றால் என்ன? தோன்றி அழிவன எல்லாம் கற்பனை என்ப. உலகம் கற்பனை சொரூபம். காரியம் எல்லாம் கற்பனையே. கற்பனை யின்றிக் காரியம் இல்லை. ஆதலால் காரியமாகிய வியாபகம் அனைத்தும்—பிரபஞ்சம் அனைத்தும் கற்பனையே என்க. இவ்வாறுபின் வீடு பேறு எவ்வாறு? எனின், கற்பனையைக் கொண்டுதான் வீடு பேறு அடைதல் வேண்டும் என்றே கூறப்படும். இஃ தன்றி வேறு வாயில் ஏது? வேறு வாயில் இல்லை. கற்பனை எல்லாம் மாயையே என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. தோன்றி மறைவும் தன்மை உடையதே மாயை எனப் படுவது. வியாபகமாகிய காரியத்தைக் கொண்டே வியாப்பியமாகிய காரணத்தை—பதியை—பதியாகிய நிலைக் களத்தை அடையவேண்டும். நில்லாதனவற்றைக் கொண்டே அவற்றை நிறை முறையோடு பஞ்சீகரணித்தே நிலையானதை அடையவேண்டும்—நித்தியத்துவம் பெறவேண்டும் என்க. வியாப்பியமாகிய பதியை—பதியாகிய வாய்மையான பற்றுக்கோட்டை பற்றுக்கோடு என்னும் நிலைக்களமான சார்பை உணர்ந்து, அதனையே அடிப் படையாக — இலக்காகக் கொண்டு, முன்னிலையாகிய — வியாபகமாகிய மாயையின் சார்பு கெடும்படி, அம் மாயாகாரியமாகிய முன்னிலைப் பொருள்களை நிறை முறையோடு பஞ்சீகரணித்து அவற்றை உறவு படுத்தி—வென்று, நிலையில்லாத அத்தீய பற்றுக்கோட்டாலாய துன்பம் நீங்கி இன்புறவேண்டும்—வீடடைய வேண்டும் என்க. கற்பனையால் வீடு பேறடைதல் என்பதன் உண்மை இதுவே என்பது. இவ் அரிய பெரிய வேத உண்மையையே பின் வரும் திருக் குறளால் நன்று செவியறிவுறுத்தினர் நமது செந்நாப்புலவர் என அறிதற் பாற்று.

குறள்

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின்
மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.

(ஷி 36-ம் அதி—மெய்யுணர்தல் செ. 9).

(இ—ள்). சார்பு உணர்ந்து—ஒருவன் தனக்கு நித்தியமான பற்றுக் கோடாய் உள்ளது வியாப்பியமாகிய பதியே என அதனை உணர்ந்து, சார்பு கெட ஒழுகின்—(அப்பதியை அடைதற்குத் தடையாய் உள்ள) மாயா காரியமாகிய கற்பனைகளின் பற்றுக் கெடும்படி நிறை முறை தழுவி ஒழுகு வானுயின், சார்தருநோய் மற்று அழித்துச் சார்தரா—ஊழ் என்னும் விதியால் அவனைச் சாரக்கடவனவாய் நின்ற பிணி மூப்புச் சாக்காடும் பிறவியும் ஆகிய துன்பங்கள் தங்கட்கு மறுதலையாய அவ் உணர்வையும் அதனுலாய வாய்மையான ஒழுக்கங்களையும் அழித்து மேல் அவனைச் சாரமாட்டா என்பது.

சார்பு—இகபரம் இரண்டிலும் உயிரினுக்கு உயிராகி "உற்ற ஆக்கையின் உறு பொருள்" ஆய்—அருவாய் உள்ளாய்—பதியாய்—இடமாயுள்ள பரம்பொருள். யாவற்றுக்கும் அடிப் படையாய் உள்ளும் புறம்புமாய் நிற்கும் திருவருட் செயலே ஒவாது கண்டு தற்சுதந்திரம் ஒழிந்து நிற்றலே உணர்தல் என்பது. சார்பு கெட ஒழுகல்—குருவுரை வழுவாது அழுக்கை அழுக்கால் அகற்றல் என்னும் உபாயத்துக்கு ஒப்பக் கற்பனையாகிய முன்னிலைகளை நிறையோடு பஞ்சீகரணித்து உறவு படுத்திப் புனிதனுதல். இவ்வாறு மதிவைராக்கியத்தோடு வழுவின்றி ஒழுகுங்கால் தீவினை நிறை குறுகி நல்வினை நிறையோடு ஒப்ப நின்று அவ் இரண்டும் கெட்டுத் திரிதலால் உடலுயிர் சமம் பெறுதலாகிய இருவினை ஒப்பும் மல பரிபாகமும் சத்தி நிபாதமும் வாய்ந்து விதி வெல்லப்பட்டமையால், அவ் விதியின் பயனுகிய பிணி மூப்புச் சாக்காடும் பிறவியும் ஒழிந்து நித்தியத்துவம் உளதாதல் திண்ணம். ஆதலால் "சார்தரா சார்தரு நோய்" என்றார். ஊழின் மறுதலையாய் வைராக்கியத்தோடுகூடிய புண்ணியவினை என்னும் மதிவினை அவ்வூழையும் உப்பக்கம் காணும் (புறங்காணும்) ஆற்றல் உடையதாதலின் அதனுல் வரும்துன்பங்கள் செயலற்று மாற்றமடையும் என்பது போதர "மற்று அழித்துச் சார்தரா" என்றார். "மற்றொன்று சூழினும் தான் முந்துறும்" (குறள் அறத்துப்பால் 38-ம் அதி—ஊழ் செ. 10) என்புழிப்போல "மற்று" என்பது ஈண்டு மறுதலை என்னும் பொருட்டாய் நின்றது. பின்வரும் பிரமாணமும் சார்புணர்ந்து சார்பு

கெட ஒழுகுதலின் இன்றியமையா மையை நன்று வற்புறுத்துதல் கண்டு கொள்க.

கூறுதற்கு நாவுமுண்டோ வாய்தா
[னுண்டோ
கும்பித்துத் தம்பித்து ரேசித்தாலும்
ஆறுதலங்கண்டப்பாற் கடந்திட்டாலும்
ஐவரையுமொன்றுகக் கட்டினாலும்
மேருவிலோர் கால்வைத்து மிதித்திட்டா
[லும்
மேலான கேசரத்திற் பறந்திட்டாலும்
சார்பில்லாப் பிள்ளைகட்கு நிலைதான்
[உண்டோ
தன்னையுந்தாணறியாட்டால்சவுங்கல்
[தானே.

(சுப்பிரமணியர் ஞானதீட்சை செ. 16)

[அறியாவிட்டால் என்பது அறி யாட்டால் என நின்றது செய்யுள் விகாரம்]. சவுங்கல்=சோர்வு—துன் பம்—பிறவிநெறி. வாய்மையான சார் பாகிய திருவருளை உணர்ந்து போலிச் சார்பாகிய மாயை கெடும்படி அம் மாயா காரியமாகிய கற்பனையை நிறை முறையோடு பஞ்சீகரணித்து ஒழுகி உய்தியடையாதவிடத்து, மூனைப் போடு கூடிய போலி நிட்டைகளாலும் மருட் சித்திகளாகிய மாயா சித்திக ளாலும் நித்தியத்துவம் (நிலை) உள தாகாது என்பது இச்செய்யுளால் வலியுறுத்தப்பட்டது. போலிநிட்டை களால் பயனின்மை "சகச நிட்டை" என்னும் கட்டுரையில் ("வித்தகம்" இல. 36) கூறப்பட்டது. ஆங்குக் காண்க. உபாசக நிட்டையாளர்க்குரிய மருட் சித்திகளின் சிறுமையும் மெய் யடியார்க்குரிய அருட் சித்திகளின் அருமை பெருமையும் அமயம் நேர்ந் துழி விளக்கிக் கூறப்படும்.

கற்பனையாகிய பொய்ம்மையின் ஈற்றில் துலங்குவது—உள்ளாய் அடிப் படையாய் விளங்குவது மெய்ம்மையா கிய சத்தியம் சத்தியமாகிய சிவம்— பிரமம் என்க. மாயையாகிய பொய்ம் மையே சத்தியத்தின் ஆதித் தோற் றம். பின்வரும் பிரமாணங்கள் இவ் உண்மையை நன்று புலப்படுத்து கின்றன.

அப்பர் தேவாரம்

அண்டமாரிருளூடுகடந்தும்பர்
உண்டுபோலுமொரொண்சுடரச்சுடர்
கண்டிங்காரறிவாரறிவாரெலாம்
வெண்டிங்கட்கண்ணிவேதியனென்பரே.

(ஷெத்தத்தொகை— திருக்குறுந்தொகை செ 2)

அண்டமார் இருள்—கற்பனையாகிய மாயை. சுடர் என்பது அம் மாயையின் ஈறாய்—உள்ளாய் — அடிப்படையாய் இலங்கும் ஒளிவடிவான சத்து — சிவம். இச்சுடரைக் காண்டல் எம் போலிய உலக மாக்களுக்கு எளி தன்று. மாயையை உறவு படுத்தி வென்றமெய்யடியார்க்கே எளிதாகும். இவ் ஒளியின் பெட்பைக் கண்ட மெய்யடியாராகிய தத்துவப்பெரியார் இதனை உலகமாக்களுக்கு அறிவுறுத் துங்கால் அவர்கள் பக்குவத்துக்கு ஏற்றவாறு நிறை முறையான கற்பனை களாற்றான் உணர்த்துவர். அன்றி உள்ளவாறு உணர்த்துதலால் உலகம் பயனடைய மாட்டாது. ஆதலால் "வெண்டிங்கட்கண்ணி வே தி யன் என்பரே" என்றார்.

திருமந்திரம்

சாணுகத் துள்ளே யழுந்திய மாணிக்கக்
காணு மளவுங் கருத்தறி வாரில்லை
பேணிப்பெருக்கிப்பெருக்கிநினைவோர்க்கு
மாணிக்க மாலை மனம்புகுந் தானே.

(ஷை 7-ம் தந் 11-வது சிவபூசை செ. 21)

சாணுகம் எனப்பட்டது கற்பனை யாகிய மாயை—இருள். மாணிக்கம்— பரஞ்சுடராகிய செழுஞ்சுடர்ச் சோதி என்னும் செம்பொருள் — சிவம். "உற்ற ஆக்கையின் உறுபொருள்" ஆகிய இச் செழுஞ்சுடரைக் கண்ட போதுதான் கற்பனையாகியமாயையின் வரலாறு அறியப்படும். ஆதலால் "மாணிக்கம் காணுமளவும் கருத்தறி வாரில்லை" என்றார். கற்பனையாகிய மாயையை நிறை கண்டு பஞ்சீகர ணித்து இம் மாணிக்கத்தைக் கண்டு உண்மை அறியமுடியாது படிப்பு வல்லபத்தாலும் தற்போதத்தாலும் மாயையின் வரலாறு என்று மனம் போனவாறு வாலியம் வாலிய மாகப் பலபட எழுதிவைத்து அம் மாயை வலைப்பட்டுச் சாதலடைந்த தும் அடைவதுமே உலகியலாயிற்று. பேணிப் பெருக்கிப் பெருக்கி நினைதல் —சார்புணர்ந்து சார்புகெட ஒழுகுத லால் உணர்ச்சிமயமாய் நின்று ஆக் கையின் உறு பொருளாகிய செம் பொருளை விளைவேற்றுதல். இவ்வாறு விளைவேற்றிச் சிந்தை தெளிந்தோர்க் குக் கற்பனையாகிய மாயா சம்பந்தம் நீங்க அவர் சிந்தையாகவே—அவர் வடிவாகவே அவ் அருட் பெருஞ் சோதியாகிய சிவபரம்பொருள் விளங் கும் என்பார் "மாணிக்க மாலை மனம் புகுந்தானே" என்றார். "சித்தமல மறுவித்துச் சிவமாக்கி" (திருவாசகம் அச்சோப்பதிகம் செ. 1) என மணி வாசகர் அருளியதும் "ஈனமற்ற காய மாய் இருப்பன் எங்கள் ஈசனே" எனச் சிவவாக்கியர் அருளியதும் அறிக. (ஷை பாடல் செ. 20)

கற்பனையின் பெற்றியை அநுப வமாய் உணர்ந்து, அதனைக் கொண்டு தான் சீவர்கள் உய்தியடைய வேண் டும் என்றே அஃதாவது கற்பனை யாகிய மாயையை நிறை முறையோடு பஞ்சீகரணித்து ஆண்டு உண்டு உறவு படுத்தி அழியும் தன்மையை விண்டு அழியாத் தன்மையை அடையும் வாயில் இது எனக் கண்டு உய்தி அடைய வேண்டும் என்றே சில பெரியார்—தத்துவப் பெரியார் வியா பகமாகிய பாஷைகளில் தம் தம் அநுபவங்களை — அநுபவ வாயிலாக அறிந்த உண்மைகளை நிறை முறை அமைந்த கற்பனைகளால் அருளிச் செய்தனர். தாம் அருளிச்செய்த நூல்களைக் கற்பதற்கும் கற்றவாறே ஒழுகிப் பயனடைதற்கும், சீவர்கள் பக்குவம் நோக்கி, அதிகாரிகள் இவர் எனவும் வரையறுத்து வைத்தனர். பின் வரும் பிரமாணங்கள் வேத நூல் களை ஓதிப் பயனடைதற்குரிய அதி காரிகளை நன்கு புலப்படுத்துகின்றன.

திருவாசகம்

"சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து [சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து."

(ஷை சிவபுராணம்.)

திருஞானசம்பந்தர் தேவாரம்

"……ஞானசம்பந்தனுரைசெய்த
திருநெறிய தமிழ்வல்லவர் தொல்வினை [தீர்தலெளிதாமே."

(ஷை திருப்பிரமபுரம், பண் நட்ட பாடை [செ. 11)

"……ஞானசம்பந்தன்சொற்
சென்றையான்மகிழ்ந்தேத்த வல்லாரேல் [லாம்
பந்தபாசமறுக்கவல்லார்களே."

(ஷை நமச்சிவாயப் பதிகம் செ. 11)

அப்பர் தேவாரம்

"……
காப்பினைதழுவிய நமச்சிவாயப்பத்
தேத்தவல்லார் தமக்கிடுக்கணில்லையே."

(ஷை நமச்சிவாயப்பதிகம் செ. 10.)

சுந்தரர் தேவாரம்

"……தொண்டனூரன்சொல்
விவைசொல்லுவார்க் கில்லைதன்பமே."

(ஷை நமச்சிவாயப் பதிகம் செ. 10)

திருமந்திரம்

மூலனுரை செய்த மூவாயிரந்தமிழ்
ஞால மறியவே நந்தி யருளது
காலை யெழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே.

(ஷைதிருமந்திரத் தொகைச்சிறப்பு செ. 1)

தத்துவப்பெரியார் எல்லாம் கற்பனை ரூபமாகவே நூல்களை அருளிச் செய்ததன் காரணம் என்னை? எனின், சீவர்கள் பக்குவங்களுக்கு ஏற்ற ஏற்ற வாறு கற்பனைகளைக் கொண்டே உண்மைநிலையை அடையவேண்டியது முறையாதலும், கற்பனையாகிய மாயா காரியமேயன்றி உண்மை நிலை அடைதற்கு வேறு தடம் இன்மையும் ஆம் என்றே கூறற்பாற்று. கற்பனை அனைத்தும் மாயாகாரிய மாதலால், அம்மாயா காரியங்களைக் கொண்டே—அவற்றை நிறை கண்டு பஞ்சீகரணித்தே கடவுள் திருவடியை அடைய வேண்டும் என ஒருவன் கூறுவானுயின், அக்கூற்றை எவ்வகையான தடையுமின்றி—சர்ச்சையுமின்றி ஒப்புக் கொள்பவர் மிகச் சிலரே யாவர். இதனை ஒருவாறு ஒப்புக்கொண்ட சிலரும் அம்மாயா காரியமாகிய கற்பனையை இன்ன இன்ன வகையாகப் பஞ்சீகரணித்து அதனைக் கொண்டு தான் கரையேற வேண்டும் என ஒருகால் அறியினும், அவ்வாறு ஒழுகுதல் சிறிதும் இன்றி ஒவ்வோர் அமயத்து மனதுக்கு அவச்சலனம் உண்டாகுங்கால் தாம் அறிந்தனவாகிய மேமேல கண்ட விஷயங்களிலும் தோஷம் கண்டு கூறுவர். கற்பனையாற்றன் கரையேற வேண்டும் என உணர்வதற்கே எண்ணிலிகாலம் தவம் இயற்றிய புண்ணியம் வேண்டும் என்றால், அக்கற்பனைகளின் உட்பொருளை அறிவது எளிதாமோ? கற்பனைகளாற்றன் கரையேறவேண்டும் என அறிந்த சிலருள் ஒருவர் மேலே கூறியவாறு ஒழுகுதற்கு ஆசைப்படுவர். இதனுற்றன் நூல்களை இயற்றுபவர் பாயிரம் கூறும்போதே இன்னூர் தாம் இந்நூலை ஓதிப் பயனடைதற்கு உரியார் எனக் கூறிப் போதருதலும் மரபாயிற்று என்க. இவ்வாறு சிலநூல்களில் கூறியிருப்பதைக் கண்ணுற்ற சிலர் அந்நூல்களைத் தாமே யன்றிப் பிறர் படிக்கக்கூடாது என்கின்றனர். இவ்வாறு கூறுவோர் அந்நூல்களைப்படிப்பதால் அடையும் பயன் ஏதும் உண்டோ? எனின், ஒன்றும் இல்லை என்பதுகண்கூடு. பக்குவியானவன் கற்பனைகளாகிய இடுகுறிகளால் உண்மையை உணர்ந்து உய்தியடைவன். பிரம்ம சூத்திரிய வைசிய சூத்ர என்னும் மரபுகளும் மூர்த்தி தலம் தீர்த்தங்களும் கற்பனைகளே என உணர்வன். உணர்ந்து கமல நீர் போல் இருந்து ஏற்றவாறு ஒழுகுவன்; அவற்றைப் புறக்கணிக்கமாட்டான். வருணச்சிரம தருமங்கள் எல்லாம் சீவர்கள் தங்கள் தங்கள் பக்குவத்துக்கு ஏற்ப அநுட்டித்துப் படியேற்றம் பெற்றுத் தூயராதற் பொருட்டே பெரியோரால் ஏற்படுத்தப்பட்டனவாகும். இவையெல்லாம் கற்பனை எனக்கண்டு இவற்றூல் உண்மையை நாடி உய்தியடையும் உத்தமர் உலகியலாகிய இவற்றைப் புறக்கணிக்க முயலார். உலகியலைப் புறக்கணிக்கத் துணிதல் வானத்தை மூடிப்பந்தர் போடத் துணிவதையே ஒக்குமன்றி வேறு என்னை?

வேதம் ஆகமம் முதலாக உலகில் வழங்கும் நூல்களும், திருவாசகம் தேவாரம் திருவாய்மொழி திருமந்திரம் முதலியனவும், வாய்மையான சித்தர் நூல்கள் என வழங்குவனவும் கற்பனைவாயிலாக உண்மையைக்கண்டு கடவுள் அருளைப் பூரணமாகப் பெற்ற தத்துவப்பெரியார் வாக்குக்களாய்—சிவ வாக்குக்களாய் அமைந்துள்ளன வாதலால், அரியபெரிய வேதரகலியங்களை மறை பொருளாகக் கொண்ட நிறைமுறை திகழும் உண்மைக் கற்பனைகளேயாகும். தேவாசுரயுத்தம், அமிர்தமதனம், திரிபுரசம்மாரம் முதலிய கதைகளும், சீதையை வந்தித்தல், பால் கறத்தல், பாலுண்ணல், கதவுதிறத்தல், காலனை உதைத்தல், காதை தாளற வீசல், கண்மூடல், மார்கழி நீராடல், பொற்சுண்ணம், பொன்னூசல், பூக் கொய்தல், (திருப்பூவல்லி), தெள்ளேணம், தோணோக்கம் முதலியனவும், சூடலையாடல், பேயொடாடல், நீறணிதல், பிக்ஷாடனம், இடப மூர்தல், மயிலூர்தல், கங்கையணிதல், மதியணிதல், கொன்றையணிதல், நஞ்சுண்ணல், கண்ணப்பல், காலாட்டல், பாம்பாட்டல், அக்காணி கழித்தல் முதலிய பரிபாஷைகளும் உடலுயிர் விமலமாய் அமலமாய்ச் சிவாங்கமாதற்கண் உளவாகும்

ஒவ்வோர் அநுபவ உண்மைகளை மறைபொருளாக உணர்த்தும் கற்பனைகளேயாகும். இன்னும் சாதாக்கால், வேகாத்தலை, போகாப்புனல், கருஞ்சாரை, வெண்சாரை, கருநெல்லி, மூப்பூ, பூநீர், காரம், சாரம், கோசம், பீஜம், உப்பு, காடி முதலியனவும், அடி, நடு, முடி, இரவு, பகல், அமாவாசை, பூரணை, மலை, கடல், மழை, மகேந்திரம், கல்லால், மேரு, வரை, இமயம், இலங்கை முதலியனவும் கயிலை, வைகுண்டம், சிதம்பரம், காசி, காஞ்சி, மதுரை, ஆரூர் முதலியனவும் ஒவ்வோர் அநுபவ நிலைகளை உணர்த்தும் பரிபாஷைகளாகிய கற்பனைகளே யாகும். அண்ணல் திருமூலர் தமது திருமந்திரத் திருமறையில் உலகமாக்கள் சாதிப்பெயர், ஊர்ப்பெயர், விலங்கு, பறவை, ஊர்வன நீர்வாழ்வன தாவரம் என்பனவற்றின் பெயர் முதலாக எத்தனையோ பல பரிபாஷைகளாகிய கற்பனைகளால் உண்மையை உணர்த்துகின்றார். இவையெல்லாம் தமிழ்ச் சொற்களேயாயினும் இவற்றின் பொருளெல்லாம் படிப்பு வல்லபத்துக்கு முயற்கொம்பேயாயின. இவ்வாறே மற்றைய சித்தர் நூல்களிலும் எத்தனையோ பல சொற்களும் சொற்றொடர்களும் காணப்படுகின்றன. இவையெல்லாம் அரிய பெரிய சிவதரகஸ்யங்களையே தம்முட்கொண்ட திருகூகளையுடைய மறைகளாகின்றன; குருவாயிலாகவும் அநுபவ வாயிலாகவுமே அறிதற்பாலன. தெய்வவடிவங்கள் என அமையப் பெற்றனவும்—சாங்கோபாங்கப் பிரத்தியங்கங்களும், திருநாமங்களும்—கௌணப்பூரணமாய் மிளிரும் ஸஹஸ்ர நாமங்களும் ஆழ்ந்த பொருளமைந்தகற்பனைகளே யாகும்- ஆலய அமைப்பும் மண்டபங்களும் பிராகாரங்களும் துவசத்தம்பம் பலிபீடம் முதலியனவும், ஆண்டுள்ள மூர்த்தங்களும், யாகசாலை, பாகசாலை கூபம் குளம் வாகனம் சப்ரமஞ்சம் தேர் முதலியனவும், வாத்திய கோஷங்களும் கர்ஷணாதிப் பிரதிஷ்டாந்தம் பிரதிஷ்டாதி உற்சவாந்தம் உற்சவாதிப் பிராயச்சித்தாந்தம் ஆகியுள்ள கிரியைகள் மந்திரங்கள் முதலியனவும், சோடச உபசாரவகைகளும்—உடலுயிர் அமலமடைந்து கற்பூர வண்ணமாய் அகண்டாகார அருட்பெருஞ் சோதியால் விழுங்கப்பட்டு அருளாகிக் கரைந்து சிதாகாசப் பெருவெளியில் மறைதலைக்காட்டும் கற்பூர தீப ஆராதனையை இறுதியாகவுடைய தீப ஆராதனை வகைகளும் பிறவும் எல்லாம் ஆழ்ந்த கருத்துக்கள் அமைந்த கற்பனைகளே யாகும். இவையெல்லாம் குருவருளால் உடலுயிர் முறையே விமலமாய் அமலமாய்ச் சீவன் முத்திநிலை வாய்ந்து சிவாங்கமாதலைக்காட்டும் நிறை முறையான கற்பனை நெறிகளே என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. அமயம் நேருந்தோறும் இத்தகைய கற்பனைகளின் உண்மைப் பொருள் சிறிது சிறிதாக விளக்கிக் கூறப்படும்.

மேலே கூறியன வாயிலாக உண்மையை நாடும் அறிவுடையோர் இவையாவும் கற்பனையே எனக் கருதுவதால் முன்னிலைகளை வெறுத்தவராவரோ? எனின், ஆகமாட்டார். ஏனெனில், கற்பனையாகிய போலியைக்கொண்டே இயற்கையாகிய உண்மையை அறிய வேண்டும் எனவும், இவ் அநுட்டானமன்றி வேறு அநுட்டானம் கைக்கொள்வதற்கு இல்லை எனவும் நன்குணர்ந்தவராதலால் என்க. கற்பனையைப் போலி என்று உணர்ந்த பின்னேயே உண்மையை நாடும் ஆற்றல் உளதாகும் என்க. கற்பனைகள் வாயிலாக உண்மையை உணர்ந்து உய்தி அடைதலே முறையாகும். ஆதலால் இடுகுறிமரபுகளும் அவ்வவற்றிற்குரிய தருமங்களுமாகி விளங்கும் கற்பனைகளால் உண்மையை நாடி உய்தியடையும் ஆற்றலும் காதலும் இல்லாது அவற்றை அறவே ஒழிக்க முயல்பவனை அறிவுடையோன் எனக் கூற முடியாது. அவன் முடியாத காரியத்தில் ஈடுபட்டழலும் கயவன் என்றே கூறற்பாற்று.

தன்னிலையாகிய நமது சரீரமும் கற்பனையேயாதலால் முன்னிலைகளாகி விளங்கும் கற்பனைகளால் உண்மையை உணர்ந்து அதனை ஏற்ற சாதக யோகங்களாகிய கற்பனைகளால் உறவு செய்யவேண்டும்—வசப்படுத்தவேண்டும். அவ்வாறு உறவு செய்யப்பட்டபின் அதுவே விமலமாய் அமலமாய் அருளாகும் அருளாகிய வீடாகும் என்க. குருவருளால் பெறப்படும் இனமான —நிறை முறையான கற்பனைகளைக் கொண்டே சரீரமாகிய கற்பனையை—மாயாதநுவை—மருளுடம்பை அமலமாக்கி நித்தியப் படுத்தவேண்டும்—நித்தியத்துவம் பெறவேண்டும் என்க. குருவருளால் பெறப்படும் சாதக யோகங்களும் கற்பனையே என்பது;

"அருங் கற்பனை கற்பித்தாண்டாய்"

(திருவாசகம்—கோயின் மூத்த திருப்பதிகம் [செ. 7.)

என மணிவாசகர் அருளியதனால் நன்று வலியுறுகின்றது. வருணச்சிரம தருமங்களாகிய கற்பனைகள் சிவர்கள் பக்குவத்துக்கு ஏற்றவாறு உலகியலில் போலியாக அமைத்திருத்தல் போலவே உண்மை நிலையிலும் வாய்மையாக அமைந்திருப்பனவாகும். பின்வரும் பிரமாணமும் இவ்வுண்மையை நன்று வலியுறுத்துகின்றது.

சித்தாந்த சிகாமணி.

வருண நன்னிலைத் தருமங்களிருவகைப்ப [மொன்றான நைந்தது, மற்றைய தயன நைந்த [தவரம் பரனநைந்தது பயிலுவர் சிவாச்சிரயத்தர் பிரமனல்லிய தருமமே பிராகிருதர்க்கு.

(ஷி பூர்வாச்சிரய நிராசனத்தலம் செ. 4.)

காயம் அழிந்துவிடும்; அழிக்கே விடும். பிரமன் கைபெழுத்தை வெல்ல முடியாது—விதியை வெல்லமுடியாது எனவும் சில நடை கொடிகளால் இறந்தபின் முத்தியடைந்து விடலாம் எனவும் துணிந்து அதற்கு ஏற்ப

ஒழுகுவது உலகியல். இவரே அயன் என்னும் பிரமன் அறைந்த தருமத்தைக் கைக்கொள்பவர். இது வாயிலாக உண்மையை நாடிக் குருவருள் பெற்று அவனால் உபதேசிக்கப்படும் வாய்மையான வருணச்சிரம தருமங்களாகிய சாதக யோகங்களைக் கைக்கொண்டு ஒழுகுபவரே "பரன் அறைந்தது பயிலும்" சிவாச்சிரயத்தர்—சிவப்பிரசாதம் பெற்றவர்—அமல முதற்படி கண்ட மெய்யடியார் என்க. இவரே விதியை வென்று நித்தியத்துவம் அடைபவர். பலசென்மங்களில் அயன் அறைந்த தருமத்தை அநுட்டித்தவரே மேல் புண்ணிய சென்மம் ஒன்றில் பரன் அறைந்தது பயிலும் பக்குவம் உடையோராவர். ஆகமாந்தமாகிய சித்தாந்த சிகாமணி என்னும் இவ் அரிய பெரிய நூல் சம்ஸ்கிருத பாஷையில் இரேணுக கண நாதர் என்பவரால் அருளிச் செய்யப்பட்டது. தத்துவப் பெரியாராகிய இவர் சோமேச சந்நிதானத்தில் அருட்பெருஞ் சோதி வடிவாய் உடலோடு மறைந்தனர் என்ப. இந்நூலைத்தமிழில் மொழி பெயர்த்தவர் புலவர் பெருமானுகிய தூமைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்.

காயம் திரியும் தந்திரமாகிய அரிய பெரிய காயத்திரியை—மாற்றிப் பிறத்தற்குரிய வாய்மையான சாதக யோகங்களைக் குரு வருளால் அறிந்து அசுத்த தநுவாகிய மருளுடம்பு விமல தநுவாக மாறப்பெற்று அகமும் புறமும் தூயராய்த் தம்மை உணர்ந்து சிவமான மெய்யடியாரே உயர்ந்த சாதியாளராவர். இவர்க்கும் மாற்றிப் பிறக்கும் வகை அறியாத மருளுடம்பினராகிய எம்போலிய உலகச் சாதியாளர்க்கும் இடையிடு அளவிடுதற்கு அரியது. பின்வரும் பிரமாணமும் இவ்வுண்மையை நன்கு வலியுறுத்துகின்றது.

சிவானந்தபோதம்

சாதிபேதந்தனைக் குறித்துத் தயங்கி
மயங்கித் தியங்காதே
சாதியாவ தெவரறிவர் சருவவுடலுமொன்
[ருச்சே
சாதியாவரெவரென்னில் தன்னையறிந்து
[சிவமான
சாதிபெரிய சாதியெனச்சாற்று மறைகள்
[சத்தியமே.

(ஷை செ. 27.)

தமது உடலம் விமலமாகப் பெற்றுத் தம்மையறிந்து சிவமான மெய்யடியாரும் தமது நீர்மையைப் பிறர் அறியாதவாறு உலகியற் சாதிக்கு ஏற்றவாறே ஒழுகுவர். ஆதலால் பிணாற்றம் பொருந்திய அழுக்காகிய மலஞ்சோருங் ஒன்பது வாசலுடைய அசுத்த தநுவானது மாற்றிப் பிறந்து சிவமாகப் பெறுத எம்போலிய உலகமாக்கள் யாவருக்கும் ஒத்ததே எனினும், போலியான பிறப்பிலுல் ஆய சாதி ஆசாரங்களுக்கு ஏற்ற உயர்வு தாழ்வுகளும் உலக சம்பிரதாயமாக நிறை முறை தழுவி அநுசரிக்கபட வேண்டியதென்பது மறுக்க முடியாததே. ஆதலால் சாதி வரம்புகளாகிய கற்பனைகளை அறவே ஒழிக்க முயல்வது அறிவுடையோர் செயலன்று என்பது சொல்லாமலே அமையும். உலகியலை ஒழிப்பதும் முடியாத காரியமே.

குறள்

உலகத்தோ டொட்ட வொழுகல் பல
[கற்றுங்
கல்லா ரறிவிலா தார்.

(ஷை 14-ம் அதி. ஒழுக்கமுடைமை செ.10)

என்றனர் பொய்யில் புலவர்.

பல நூல்களைப் படித்தவராயினும் உலகியலோடு ஒத்து வாழ்தலைக் கற்று அறியாதவர் அறிவில்லாதவரே யாவர் என்பது இதன் பொருளாகும். உலக இயற்கையை அறிவது எளிதன்று. குருவருளால் பெறப்படும் சாதக யோகங்களால் நம்முள்ளே அருணேதயம் ஆதல்வேண்டும். அப்பொழுது தான் முன்னிலையாகிய உலகியல் வாய்மையாக அறியப்படும். இது பற்றியே

".....
அருந்தவருக் கறமுதலுன் கன்றருளிச்
[செய்திலனேல்
திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண்
[சாழலோ."

(திருவாசகம் திருச்சாழல் செ. 20).

என அருளிச்செய்தனர் மணிவாசகப் பிரபு. உலகியலை வாய்மையாக உணர்ந்து ஒப்புர வொழுகுதலே சிறந்த தவம் எனப்படும். இஃதே சிறந்த தவம் என்றால், உலகில் நிகழ்வன யாவற்றையும் கைக்கொண்டு ஒழுகலாமோ? எனின், அற்றன்று! ஈனர்கள் புல்லர்கள் தஸ்யுக்கள் வலிம்யுக்கள் கூறுவனவற்றிற்கு எல்லாம் ஆம் ஆம் என்று இணங்கி மறத்தாறு எனக் கண்டனவற்றை எல்லாம் உளந்தூதல் தவம் என்று கூறப்படாது என்க. குருவருளால் அறத்தாறு எனக்கண்டனவே ஒப்புரவொழுகுதலால் உளந்தூதற்பால அருந்தவம் என அறிதற்பாற்று. உலகியலாகிய இடுகுறி மரபுகளைப் புறக்கணிப்பதும் அவை கொண்டு உண்மையை நாடி உய்தியடையாது அவற்றையே வாய்மை என நம்பி அமைவதும் உய்யுந்திறன் ஆகா என்க. தற்காலத்தில் இவ் இருவகையினருமே மலிந்துள்ளனர். ஒரு சாரார் கற்பனைகளையே உண்மை என நம்பி அவை கொண்டு உண்மையை நாடி உய்தியடையாது உண்மையை நாடி உரைப்போரையும் குறை கூறிச் சில நடைதொடிகளால் செத்த பின்பு சுலபமாக முத்தியடைந்து விடலாம் எனச் சாதலை எதிர்பார்த்து வீற்றிருப்பவர், மற்றொரு சாரார் கற்பனைகளெல்லாம் வயிற்று வளர்ப்புக்காக ஏற்படுத்தப்பட்ட பொய்க் களஞ்சியங்கள் எனவும் அவற்றை அறவே ஒழித்துவிட வேண்டும் எனவும் கூப்பாடு போட்டுக்கொண்டு அவதியுற்றுப் படுகுழியில் வீழ்வதற்குப் பகீரதப்பிரயத்தனம் பண்ணி நிற்பவர். இவ் இரு சாராரும் உண்மையை நாடி உணர்ந்து உய்தியடையும் ஆற்றலும் காதலும் இல்லாதவர் என்பது வெள்ளிடை-

கற்பனைகளையே உண்மை என நம்பி அமைதலும் அவை கொண்டு உண்மையை நாடி உணர்ந்து உய்தியடையாது அவற்றைப் புறக்கணித்தலும் உய்யுந்திறன் ஆகா என்பது பின் வரும் தேவர் திருவாக்கானும் நன்று வற்புறுத்தப் பட்டமை கண்டுகொள்க.

குறள்

பொருளல் லவற்றைப்பொருளென்றுணரு
மருளாஞ் மாணாப் பிறப்பு.

(ஷை 36-ம் அதி. மெய்யுணர்தல் செ 1)

(இ—ள்) மாணாப்பிறப்பு—துன்பம் தரும் பிறவி நெறியானது, பொருள் அல்லவற்றைப்பொருள் என்று உணரும் மருளான் ஆம்—பொய்ப்பொருளாகிய மாயாகாரியம் என்னும் கற்பனையையே மெய்ப்பொருள் என்று உணரும் மயக்க உணர்ச்சியினூற்றூன் உளதாகின்றது என்பதாம்.

தோன்றி மறையும் இயல்புடைய தாதலின் மாயை பொய்ப்பொருள் எனப்பட்டது. "பொய்யாயினவெல்லாம் போயகல" (திருவாசகம் சிவபுராணம்) என மணிவாசகர் அருளியதும் அறிக. கற்பனையையே உண்மை என உணர்தல் மயக்க உணர்ச்சி என்பதும் அம்மயக்க உணர்ச்சியே பிறவிக்கு ஏது என்பதும் இதனால் நன்று வலியுறுத்தப்பட்டன.

எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்
[பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(ஷை ஷை செ. 5.)

(இ—ள்) எப்பொருள் எத்தன்மைத்தாயினும் — எவ்வகையான பொருள் எவ் இயல்பினையுடைது ஆயினும், அப் பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு—அதனைப் புறக்கணிக்காது அவ்வகையான பொருளால் அஃதாவது அவ்வகையான பொருளே நிறைமுறையோடு உறவு படுத்தி உணர்தலால் அதற்கு அடிப்படையாயுள்ள சத்தியத்தைக் காண்பதே மெய்யுணர்ச்சி என்பதாம்.

கற்பனையாகிய மாயாகாரியங்கள் எவ்வெவ் இயல்பின வாயினும் அவ்வவற்றை நிறைமுறையோடு உறவு படுத்தி அவை வாயிலாக அவற்றிற்கு அடிப்படையான சத்தியத்தைக் கண்டு உய்தி பெறுதலே அறிவினால் ஆம் பயன் என்பதும், கற்பனைகளைப் புறக்கணித்தல் உய்யுந்திறனன்று என்பதும் இதனால் நன்று வற்புறுத்தப் பட்டன.

இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு

(ஷை ஷை செ 2).

(இ-ள்) மருள் நீங்கி மாசறு காட்சியவர்க்கு — (கற்பனைகளை நிறைமுறையோடு உறவு படுத்துதலால், அவற்றையே உண்மை என நம்பி உழலும்) மயக்க உணர்ச்சி நீங்கி மெய்யுணர்ச்சி கைவரப்பெற்றவர்க்கு இருள் நீங்கி இன்பம் பயக்கும்—அஞ்ஞானமாகிய மலம் கெட்டுத் திரிந்து பேரின்பமாகிப் பயன்படும் என்பது. மெய்யுணர்ச்சி கைவரப் பெற்ற ஞான்று பாசமே ஞானமாகிப் பயன்படும் என்பதன் உண்மை இதுவே ஆம். மலம் விமலமாய் அமலமாய் மாற்ற மடையவே பிணி மூப்புச் சாக்காடும் பிறவியும் ஒழிந்து வீடு பேறு உளதாகும் என்க. இதனால் கற்பனைகளை நிறைமுறையோடு பஞ்சீகரணித்தலால் மெய்யுணர்ச்சி கைவரப் பெற்று வீடு பேறடைதல் கூறப்பட்டது.

வேதம் ஆகமம் புராணம் இதிகாசம் என்பனவற்றில் காணப்படும் கற்பனைகள் பயனற்றன எனவும், அவற்றை முற்றுகப் புறக்கணிக்க வேண்டும் எனவும், வருணச் சிரம தருமங்களை முற்றுக ஒழித்துவிடுவதே சீர்த்திருத்தம் எனவும் சாலச் சிறந்த அறத்தாறு எனவும் ஒலிடுவோரும், பத்திரிகை வாயிலாக விஞ்ஞாபனம்செய்து பெரு முழக்கிடுவோரும் தற்காலத்தில் மிகப்பலர் ஆயினர். கற்பனை நெறிகளை அருளிய சிவகாருண்ணிய மூர்த்திகளாகிய பெரியார் நோக்கத்தை மேனாட்டுநாகரீக ராஜ்யதந்திர நெறிகளில் ஈடுபட்டுழலும் இன்னோர் அறிவது எப்படி? இவர்க்குச் சமாதானம் கூற முன்வருவோர் கற்பனை நெறிகளின் உண்மைகளை அறிய முடியாதுமனம்போனவாறுபலபேசிஉலகமாக்களை மேலும் மயங்க வைக்கின்றனர். கற்பனை நெறிகளுக்குக் காரணம் உண்டா? காலம் குறிப்பிட முடியுமா? எனின், இவையாவும் உலகியல் என்றும் அநாதி என்றுமே உத்தரம் கூற வேண்டும். ஆதலால் கோரணி வடிவமான கற்பனைகளை நிறைமுறையோடு உறவுபடுத்தி அவற்றில் பற்றுக்கோடின்றி உதாசீனராய் ஒழுகி வாய்மையான பற்றுக்கோட்டை கடைப்பிடித்து உய்தி பெறுதலே முறையாகும் என்க. மேலும் விரிப்பிற் பெருகும்.

இதுகாறும் கூறியவைகளால் காரியம் அனைத்தும்கற்பனையே என்பதும், அதனை நிறைமுறையோடு உறவு படுத்துவதே காரணமாகிய நிலைக்களத்தை அடைதற்கு ஏற்ற அறத்தாறு என்பதும், அதுவே வாயிலன்றி வேறுவாயில் இல்லை என்பதும், அதனைப் புறக்கணிக்கத் துணிதலும் அதுகொண்டு உண்மையை நாடாது அதனையே உண்மை என நம்பி அமைவதும் உய்யுந்திறனுகா என்பதும் ஒருவாறு உணரத்தகும்.

சுபம்

"வித்தகம்"

விளம்பர விகிதம்.

வியாபார விளம்பரம் அங்குலம் 1க்கு
ரூ. 0—8—0

கோர்ட்டு விளம்பரம் அங்குலம் 1க்கு
ரூ. 1—0—0

☞ நீடித்த விளம்பரங்களுக்கு தனி விகிதம்.

வித்தக நிலையம்,
புதுச்சேரி.

DISCOURS
DE
MONSIEUR SOLOMIAC
Gouverneur Général de l'Inde Française

Messieurs,

Rien ne pouvait m'être plus agréable, à mon arrivée dans l'Inde, que d'être accueilli, au seuil de la maison de France, par la fidèle amitié du Gouverneur *Bourret*. C'est un passé déjà fort éloigné certes, qui revit ainsi en moi, mais combien attrayant, parceque tout enveloppé d'affectueuse camaraderie.

Aussi, lorsque j'ai été investi de la délicate mission de présider aux destinées de la Colonie, ai-je-pensé que je pouvais essayer mes forces à la tâche qui m'était proposée sachant bien que le gros oeuvre, marqué par mes éminents prédécesseurs au sceau de la plus belle tradition française, portait aussi l'empreinte récente de l'intelligence profonde, de l'expérience saine et sûre, de la générosité de coeur de mon ami Bourret.

En lui renouvelant, ici, mon ardente sympathie, je formule le voeu qui est, j'en suis sûr, dans toutes les pensées, de voir récompenser à leur valeur les services si distingués du Gouverneur qui me transmet ses pouvoirs.

Me parlant de nos Etablissements, M. le Gouverneur Bourret, en touches délicates, dignes de sa belle formation, souligne l'affabilité, la courtoisie, la ténacité dans le labeur de la population, qui est, par ailleurs, profondément attentive à ses traditions et à ses rites. Il ne pouvait mieux justifier l'orientation donnée à notre action pour assurer le rayonnement du génie français dans le respect des traditions locales.

L'harmonie ainsi établie permettra certainement de rechercher, ou de poursuivre les méthodes susceptibles de contribuer à la prospérité publique, d'améliorer le sort de l'individu ou de la famille, tant sur le plan social que dans le domaine économique.

Je sais pouvoir compter, pour atteindre ces buts, sur le dévouement de tous mes collaborateurs à leurs fonctions; en persistant dans cette ligne de conduite ils sont assurés de bien servir les intérêts généraux de la Colonie.

J'ai la conviction, aussi, que les Corps Elus apporteront au Gouvernement local leur concours éclairé pour seconder efficacement mon effort tendant à augmenter le bien-être des populations.

Par avance, je remercie les uns et les autres.

A la population, j'adresse, à nouveau, ici mon salut le plus cordial je lui apporte ma bonne volonté, mon sincère amour de l'ordre, du calme, sachant bien qu'on ne réalise que dans le silence, et mon désir absolu de travailler pour elle, à l'exclusion de toute préoccupation personelle.

En recevant de mon Prédécesseur et ami l'Administration de ce pays, je lui renouvelle mes compliments pour l'heureux accomplissement de sa Mission à Pondichéry et nos souhaits d'heureux séjour en France, qui s'adressent aussi à Madame Bourret.

[Solomiac (Léon) né le 20 juillet 1884 à Cajare (Lot); services militaires du 11 novemvre 1902 au 19 septembre 1903, et du 21 avril 1904 au 23 septembre 1905; commis des des affaires indigénes, 20 décembre 1906, adjoint, 1er janvier 1910; administrateur adjoint des colonies, 30 décembre 1915; administrateur, 1er janvier 1922; administrateur en chef, 1er juillet 1925; chevalier de la Légion d'Honneur, 22 juillet 1925; gouverneur des colonies, 30 octobre 1930; En service détaché en Syrie.]

"வித்தகம்."
வருட சந்தா விவரம்
முன் பணம்
இந்தியா, பர்மா, சிலோன் ரூ. 3-0-0
மலாயா, சிங்கப்பூர் சைகோன் } ரூ. 4-0-0
வித்தக நிலையம்,
புதுச்சேரி.

Sandhanam Printing Works, Pondicherry. Le Gérant, R. Nagarattinam